***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.252/2025 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | சிவா |
| *Father/Husband's Name* | சண்முகம் |
| *Village* | அரிசந்திரபுரம் |
| *Taluk* | *கூத்தாநல்லூர்* |
| *Religion* | |
| *Age* | *23* |

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.04.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து தற்போது சென்னையில் டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர் மேற்படி நபர்கள் அனைவரும் எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். சாட்சிகள் முருகானந்தம், வீரமணி ஆகியோர்களை தெரியும். அவர்கள் எனது அண்ணன் உறவுமுறை ஆவார்கள். சாட்சி லதா எனது தாயார் ஆவார். சென்ற வருடம் ஜனவரி மாதம் ஒருநாள் இரவு 7.30 மணியளவில் நான் அரிச்சந்திரபுரம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு அருகே போன் பேசிக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் மின்வெட்டு துண்டிக்கப்பட்டு இருட்டாக இருந்த நிலையில் அடையாளம் தெரியாத, பெயர் தெரியாத நபர் ஒரு இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்து என் மீது மோதிவிட்டு சென்றுவிட்டார். அதில் எனக்கு தலை மற்றும் வலது கையில் காயம் ஏற்பட்டது.

2. அருகில் நின்றுக்கொண்டிருந்த முருகானந்தம், வீரமணி ஆகியோர்கள் ஓடிவந்தார்கள். இந்த தகவலை கேள்விபட்ட எனது அம்மா என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் ஒருவார காலம் சிகிச்சையிலிருந்தேன். நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலிசார் என்னை விசாரித்தபோது

மேற்கூறிய சங்கதிகளை தான் கூறினேன். போலிசார் என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன சங்கதிகள் எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. (**புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரிகளுடன் சமரசம் செய்துக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிரிகள் என் பக்கத்து ஊர்க்காரர்கள் மற்றும் எனக்கு பழக்கமானவர்கள் என்ற முறையில் சமரசம் செய்துக் கொண்டுள்ளேன் என்றால் - சரிதான். (**சமரச மனுவில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 06.01.2025 ம் தேதியன்று மாலை 5 மணியளவில் அரிச்சந்திரபுரம் கிராம நிர்வாக அலுவலகம் அருகே நான் செல்போனில் பேசிக்கொண்டிருந்தேன் என்றும், ஆஜர் எதிரிகள் மூவரும் குடிபோதையில் இருந்தார்கள் என்றும், ஆஜர் எதிரிகள் என்னை கொச்சை வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், எதிரி வடிவழகன் பீர்பாட்டிலால் என் தலையில் அடித்தார் என்றும், எதிரிகள் சந்தோஷ், திலிபன் சூர்யா ஆகியோர்கள் என்னை கீழே தள்ளிவிட்டு கையால் மாறி, மாறி அடித்தார்கள் என்றும், எனக்கு ஏற்கனவே நான் வேலை செய்யும்போது எனது வலது கையில் கம்பி வைத்து அறுவை சிகிச்சை செய்திருந்த நிலையில் மேற்படி எதிரிகள் தாக்கியதில் எனக்கு வலி அதிகரித்துவிட்டது என்றும், எதிரி வடிவழகன் பீர் பாட்டிலை காட்டி எனக்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், அருகில் நின்றுக்கொண்டிருந்த எங்கள் தெருவை சேர்ந்த முருகானந்தம், வீரமணி ஆகியோர்கள் ஓடிவந்தார்கள் என்றும், இச்சம்பவத்தை கேள்விபட்டு வந்த என் அம்மா லதா என்னை 108 ஆம்புலன்ஸ்

மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், நான் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தபோது, போலிசார் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டு, என்னிடம் படித்து காண்பித்த பிறகு தான் நான் கையொப்பம் செய்தேன் என்றும், உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரிகளுடன் சமரசம் ஆகிவிட்டபடியால் ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 10.04.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXIII Code of Criminal Procedure)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
## *CC.No.252/2025 – P.W. 2 (LW-4)*

| | |
|---|---|
| *Name* | லதா |
| *Husband's Name* | சண்முகம் |
| *Village* | அரிசந்திரபுரம் |
| *Taluk* | *கூத்தாநல்லூர்* |
| *Religion* | |
| *Age* | *45* |

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.04.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர் மேற்படி நபர்கள் அனைவரும் எனது பக்கத்து ஊர்க்காரர்கள் ஆவார்கள். சாட்சிகள் முருகானந்தம், வீரமணி ஆகியோர்களை தெரியும். அவர்கள் எனது தெருகாரர்கள் ஆவார்கள். அ.சா.1 சிவா எனது மகன் ஆவார். சென்ற வருடம் ஜனவரி மாதம் ஒருநாள் இரவு 7.30 மணியளவில் எனது மகன் அரிச்சந்திரபுரம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு அருகே போன் பேசிக்கொண்டிருந்தபோது இருசக்கர வாகனம் மோதி என் மகனுக்கு காயம் ஏற்ப்பட்டதாக தகவல் கேள்விபட்டு எனது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 06.01.2025 ம் தேதியன்று மாலை 5 மணியளவில் அரிச்சந்திரபுரம் கிராம நிர்வாக அலுவலகம் அருகே அ.சா.1 செல்போனில் பேசிக்கொண்டிருந்தார் என்றும், ஆஜர் எதிரிகள் மூவரும் குடிபோதையில் இருந்தார்கள் என்றும், ஆஜர் எதிரிகள் அ.சா.1 ஐ கொச்சை வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், எதிரி வடிவழகன் பீர்பாட்டிலால் எனது மகனை தலையில் அடித்தார் என்றும், எதிரிகள் சந்தோஷ், திலிபன் சூர்யா ஆகியோர்கள் என் மகனை கீழே தள்ளிவிட்டு கையால் மாறி, மாறி அடித்தார்கள் என்றும், எனது மகனுக்கு ஏற்கனவே வேலை செய்யும்போது வலது கையில் கம்பி வைத்து அறுவை சிகிச்சை செய்திருந்த நிலையில் மேற்படி எதிரிகள் தாக்கியதில் எனது மகனுக்கு வலி அதிகரித்துவிட்டது என்றும், எதிரி வடிவழகன் பீர் பாட்டிலை காட்டி எனது மகனுக்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், அருகில் நின்றுக்கொண்டிருந்த எங்கள் தெருவை சேர்ந்த முருகானந்தம், வீரமணி ஆகியோர்கள் ஓடிவந்தார்கள் என்றும், இச்சம்பவத்தை கேள்விபட்டு வந்த நான் 108 ஆம்புலன்ஸ் மூலம் என் மகனை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றும், உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரிகளுடன் எனது மகன் சமரசம் ஆகிவிட்டபடியால் ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 10.04.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.